**JUDICIAL MAGISTRATE COURT, No.II CHENGALPATTU**

**CC No. 181 /2017**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*********

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE, No.II CHENGALPATTU. |
| Deposition of witness for | :LW 4 / PW 3 |
| Name | : சுனில்குமார் |
| Father's Name | : பால்மின்சிங் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.11.2022.

**முதல் விசாரணை –**

நான் தற்போது உதவி ஆய்வாளராக ராஜேந்திர நகர், பாட்னா, பீகார் மாநிலத்தில் பணிபுரிந்து வருகிறேன். 2010 இருந்து 2016 இரயில்வே பாதுகாப்பு படையில் செங்கல்பட்டில் உதவி ஆய்வாளராக பணியாற்றினேன். அப்பொழுது கடந்த 21.06.2014 தேதி பணியில் இருந்தபோது தலைமை காவலர் கே. சுவாமிநாதன் என்பவர் 21.36 மணிக்கு என்னை தொடர்பு கொண்டு இரயில் எண் 12666 கன்னியகுமரி, அவுரா விரைவு வண்டி இன்ஜின் அருகில் உள்ள லக்கேட்ஜ் கம்பாட்மென்ட் அருகே சந்தேக விதமான சத்தம் கேட்டதாகவும் அதனை இரயில் பயணிகள் சுவாமிநாதனிடம் சொன்னதாகவும், அவர் என்னிடம் சொன்னார். மேற்படி தகவலை பெற்று நானும், காவலர் பிரபுவும் கண்காணித்து கொண்டு மேல்மருவத்தூர் to மதுராந்தகம் இடையில் 74 வது லேவல் கிரஸ் அருகே சென்றனர். அப்பொழுது ஏழுமலை, தியாகராஜன் மற்றும் சிலர் அலுவலர்கள் அங்கே வந்தனர். அங்கு 16 ஏலக்காய் மூட்டைகள் கிடந்தன. அதில் ஒரு மூட்டை சேதமடைந்துடைந்து காணப்பட்டது. மேற்படி 16 மூட்டைகளை

ஆய்வாளர் ஏழுமலை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினர், அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். அந்த முதல் கையொப்பம் என்னுடையது. ஆய்வாளர் சம்பவத்தை குறித்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார், அதிலும் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். பிறகு 19.12.2014 தேதி, நானும், காவலர் கதிரவனும் அவுரா சென்று 23.12.2014 அன்று அகமது என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு ஓம்பிரகாஷ் குப்தா, மீனாக்கி ராய், நவீன்குமார் அகர்வால், மற்றும் அசோக்குமார் சர்கார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. மேற்படி சாட்சிகளிடமிருந்து ஏலக்காய் மூட்டைகளை பெற்றுக்கொள்வதற்கான ரசீதுகளை பெற்றேன். மேற்படி ஓம்பிரகாஷ், மீனாக்கி ராய், நவீன்குமார் அகர்வால் ஆகியோரிடம் பெற்ற ரசீதுகள் **அசா.ஆ9 முதல் அசா.ஆ12** வரை குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அசோக்குமாரை விசாரித்து 3 unloading தகவல்களை பெற்றேன். ஆய்வாளரிடம் நான் கொடுத்த வாக்குமூலமானது **அசா.ஆ 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

கன்னியகுமாரி, அவுரா விரைவு வண்டி. அந்த வண்டியின் லக்கேஜ் கம்பாட்மென்ட்டில் பொருளை ஏற்றிய பின் அந்த கம்பாட்மென் கதவு மூடப்பட்டு சீல் வைக்கப்படும். ஒவ்வொரு 8 மணிநேரத்திற்கு வெவ்வேறு போலிசார் பயணிகளுக்கு பாதுகாப்பு பணியில் ஈடுப்படுவார் என்றால் சரிதான். விழுப்புரம் to சென்னை வரை பாதுகாப்பு பணிக்காக போடப்பட்டுயிருந்த போலிசாரை விசாரணை செய்யவில்லை. அதேபோல் அந்த வண்டியின் டிக்கெட் பரிசோதிப்பளரை விசாரணை செய்யவில்லை. அதேபோல் முதல் விசாரணையில் பயணிகள் தகவல் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளேன், அவ்வாறு அந்த பயணிகளை ஆய்வாளர் விசாரணை செய்தரா என்றால் இல்லை. நானும், பிரபும் அன்றைய தேதியில் பணியில் இருந்ததை நிருபணம் செய்வதற்காக எந்த ஆவணம் கொடுக்கவில்லை. மேல்மருவத்துாருக்கும்

மதுராந்தகத்திற்கு இடையே ஒரு நிறுத்தம். கேட் நெம்பர் 74 லெவல் கிரஸ் அருகே பணியில் இரயில்வே ஊழியர் இருப்பார். கைப்பற்றிய பொருட்களை குறித்து மேற்சொன்ன 74 லெவல் கிரஸ் அருகே இருந்தஊழியரிடம் கையொப்பம் எதுவும் பெறவில்லை. மொத்த ஏலக்காய் மூட்டைகளையும், எவ்வளவு தொலைவிற்குள் கைப்பற்றப்பட்டது என்றால் 1 1/2 கி.மீ கிடையே கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட பொருட்களை எந்த இடத்தில் கைப்பற்றி வைக்கப்பட்டது என்றால் மேல்மருவத்தூரிலிருந்து மதுராந்தகத்தில் இடையே ஒரு டிராக்கில் வைக்கப்பட்டது. ஏலக்காய் மூட்டைகளை டாடா ஏசி வாகனம் மூலம் ஏற்றிவந்தோம். நான் சொல்லவதுபோல் நானும், பிரபும் மேற்படி இடத்திற்கு செல்லவில்லை என்றும் ஊழியர் செய்த தவறினை மறைப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன். நானும், என்னுடைய அதிகாரியும் இந்த வழக்கு விசாரணை சம்பந்தமாக வெளி மாநிலம் சென்றோம் என்றும் அதனை நிருபணம் செய்ய எந்த ஆவணமும் என்னுடைய அதிகாரிடம் கொடுக்கவில்லை. நானும், என்னுடைய அதிகாரியும் வெளி மாநிலம் செல்லவிலலை என்றும் பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றால் சரியல்ல. மேல் அதிகாரிக்கு பவ்வியபட்டு நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 15.01.2015 தேதி என்னுடைய அதிகாரி என்னை விசாரணை செய்தார்.

**<u>JUDICIAL MAGISTRATE COURT, No.II CHENGALPATTU</u>**

**CC No. 181 /2017**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE, No.II CHENGALPATTU. |
| Deposition of witness for | :LW 3 / PW 2 |
| Name | : உன்னிகிருஷ்ணன் |
| Father's Name | : கோபாலன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.11.2022.

**<u>முதல் விசாரணை –</u>**

நான் தற்போது உதவி ஆய்வாளராக இரயில்வே பாதுகாப்பு படையில் திருச்சியில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.08.2014 தேதி உதவி இளநிலை ஆய்வாளராக குற்றபிரிவு சென்னை கோட்டம் பணிபுரிந்தபோது திரு . ரமேஷ் ஆய்வாளர் செங்கல்பட்டு இரயில்வே பாதுகாப்பு படை அவர்களுடன் மற்றும் சகக்களுடன் செங்கல்பட்டு இரயில்வே் ரோந்து பணியில் இருந்தபோது இரவு 11.30 மணியளவில் சென்னை எக்மோரிலிருந்து மங்களுர் செல்லும் வண்டி நடைமேடை 6 வந்து நின்றது. அந்த வண்டியின் இன்ஜின் அருகே பார்சல் பெட்டியில் தொங்கியிருந்த சீல் காட்டை எதிரி சையத் சித்திக் அலி பிடித்து பார்த்து கொண்டிருந்தார் மற்றும் உள்ளே எதவாது பார்சல் இருகிறதா என்று பார்த்துகொண்டிருந்தார். அந்த நேரத்தில் ரமேஷ் ஆய்வாளர் இரயில்வே பாதுகாப்பு அவர்கள் எதிரியை பிடித்த விசாரித்து தனி நபர் சாட்சிகள் கணேசன், விழுப்புரம், சந்திரசேகர் மதுராந்தகம் ஆகியோர் முன்னிலையில் விசாரித்தார். எதிரி முன்னுக்கு பின் புறமாக கூறியதின் பேரில்

எதிரியையும், சாட்சிகளையும் தனியாக அழைத்து கொண்டு இரயில்வே பாதுகாப்பு படை செங்கல்பட்டுக்கு வந்தோம். அங்கு அவரை திரு. ரமேஷ் ஆய்வாளர் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை 29.08.2016 அன்று மேற்படி தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் மேற்படி ஆய்வாளர் அவர்களின் விசாரணையை நான் பதிவு செய்தேன். அதில் எதிரி சையத் சித்திக் அலி என்பவர் குடும்பத்துடன் பண்ரூட்டில் வசிப்பதாகவும், டைலர் தொழில் செய்தவாகவும், அவருடைய அண்ணன் சையத் இப்ராகிம் பாம்பேயில் இருப்பதாக கூறினார். எதிரி அவருடைய அண்ணனை பார்ப்பதற்காக பாம்பே செல்வதாகவும் கூறினார்.

**அரசு தரப்பில் கேட்டுகொண்டத்தின் பேரில் முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd. xxxxxx

Judicial Magistrate No.II
Chengalpattu.

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.